1989 மார்ச் 28]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, உள் நாட்டுத் தொழில் நுட்ப வல்லுநர்களால்தான் செய்யப்படுடுறது.

திரு. ஆர். சாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த குளச்சல் துறைமுகத்தை அபிவிருத்தி செய்தால், எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்? இதனால் அந்தப் பகுதி மக்கள் அதிக நன்மை பெறுவார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தற்போது ஆண்டுக்கு 4 முறைதான் வெளிநாட்டுக்கப்பல்கள் வந்து மணலை எடுத்துக்கொண்டு போகின்றன. ஒரு தடவை மணலை எடுத்துக்கொண்டு செல்வதற்கு 10 நாட்களுக்கு சுமார் 2 ஆயிரம் பேர்களுக்கு தற்காலிகமாக வேலைவாய்ப்பு கிடைக்கிறது. இதை அதிகப்படுத்துவோமானால், கூடுதலான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கான நிலைமைகள் எதிர்காலத்தில் உருவாகலாம்.

திரு. ஆர். சிங்காரம் : தலைவர் அவர்களே, இந்தத் துறைமுகத்தை விஸ்தரிப்பதற்காக மத்திய அரசினுடைய உதவியைக் கோருவதற்கு கோரிக்கை ஏதாவது அனுப்பப்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அனுப்பப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 6 மற்றும் 7 மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

(முற்பகல் 9-10)

சென்னை மெரினாக் கடற்கரையில் கடல்வாழ் உயிரினக் காட்சி சாலை

8—(*வினா எண். 477) திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மெரினாச் கடற்கரையில் கடல்வாழ் உயிரினக் காட்சி சாலை (Oceanarium) நவீன முறையில் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, சென்னை மெரினா கடற்கரையில் கடல்வாழ் உயிரினக்காட்சிசாலை (Oceanarium) நவீனமுறையில் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் ஏதுமில்லை.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் முத்துக் குளிப்பதற்காக ஒரு நல்ல சூழ்நிலையிலே இயற்கையாகவே கடற்கரை உள்ளது. தூத்துக்குடியில் இப்படிப்பட்ட பல்வேறு வகை மீன்கள் கிடைக்கின்ற காரணத்தால் கடல் வாழ் உயிர் இனக் காட்சி சாலையை அமைக்கின்ற உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, இது சென்னை மெரினா கடற்கரையில் கடல் வாழ் உயிரினக் காட்சிசாலை அமைக்கும் திட்டம் பற்றிய கேள்வியாகும். தூத்துக்குடியில் அமைப்பது குறித்து தனிக் கேள்வி போட்டால், அதற்கு பதில் அளிக்க ஏதுவாக இருக்கும்.

திரு. கோ. வீரையன் : தலைவர் அவர்களே, சென்னை மெரினா கடற்கரையில் கடல்வாழ் உயிரின காட்சிசாலை நவீன முறையில் அமைப்பது பற்றிய திட்டம் இந்த அரசின் பரசீலனையில் இல்லை என்று சொன்னார்கள். இதுவரை இல்லாவிட்டாலும் இப்படிப்பட்ட ஒரு நவீன கடல்வாழ் உயிரினக்காட்சிசாலையை அமைப்பதற்கு அரசு இனிமேலாவது பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதுபோன்ற கடற்கரை ஓரங்களில் கடல்வாழ் உயிரினங்களின் காட்சிசாலைகள் அமைப்பது ஒரு உசிதமான யோசனை. திருவனந்தபுரம் போன்ற பகுதிகளில்கூட கடற்கரை ஓரத்தில் இது போன்ற கடல்வாழ் உயிரினக் காட்சி சாலைகள் அமைந்திருக்கின்றன. இதுபோன்ற காட்சிசாலைகளை அமைப்பதற்கு இந்த அரசுக்கும் ஆசை உண்டு. நிதிநிலை பற்றாக்குறைதான் இடைஞ்சலாக இருக்கிறது. எனினும் உறுப்பினருடைய ஆலோசனையை ஏற்று, அதுபற்றி சிந்திக்கப்படும்.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தலைநகரமான சென்னையில் உலகத்திலேயே மிக அழகான கடற்கரை என்று பெயர் பெற்ற மெரினாக் கடற்கரையில் இப்படிப்பட்ட கடல்வாழ் உயிரினங்களின் காட்சிசாலை ஒன்று அமைப்பது மிக மிகச் சிறப்பான ஒன்றாகும். பல்வேறு மாநிலங்களிலிருந்து வருகின்றவர்கள்

1989 மார்ச் 28]

அதைக் கண்டு செல்லக் கூடிய ஒரு நல்ல காட்சிசாலையாக அமையும் என்பதில் நாம் அனைவரும் ஒன்றுபடுவோம் என்று கருதுகிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அதுபற்றிக் கூறுகின்றபொழுது நிதிநிலை பற்றாக் குறையைப் பற்றி எடுத்துக் கூறி, ஆனாலும் அந்த யோசனை அரசுக்கு இருக்கிறது என்று இங்கே எடுத்துச் சொன்னார்கள். இந்த அரசு மீண்டும் விரைவான நடவடிக்கைகளை மேற் கொண்டு 'டூரிசம் டெவலப்மென்ட் டிபார்ட்மென்ட்' என்ற மத்திய அரசிற்குச் சொந்தமான அந்தத் துறையோடும். தொடர்புகொண்டு, அவர்களுடைய உதவியினையும் பெற்று. தமிழ்நாடு டூரிசம் டெவலப்மென்ட் கார்ப்பொரேஷனுடைய, உதவியினையும் நாம் சேர்த்துப் பெற்று.................. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் சொல்வது வினா தானே! (சிரிப்பு)

திரு. இரா. மோகன் : அந்தக் காட்சிசாலையை அமைப் பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தற்போது மெரினாக் கடற்கரையிலே பல்வேறு காட்சிகளை உறுப்பினர்கள் காணலாம். இந்தக் காட்சியையும் விரைவில் காணலாம் (சிரிப்பு).

திரு சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிரின காட்சி அரங்கங்களைத் திறப் பதிலே நமது முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கின்ற ஆர்வத்தை நான் மனதாரப் பாராட்டுகிறேன். பல்வேறு உயி ரினக் காட்சிசாலைகளை மெரினாக் கடற்கரையில் திறந்து வைக்கலாம் என்று சொன்னார்கள். எனக்கு ஒரு சிறிய ஆலோசனை. மனிதர்களிலே மிருகங்களாக இருக்கக் கூடிய வர்களையும் அந்த ஒரு காட்சிசாலையில் அடைத்துவைத்து, நாம் எல்லாம் பார்த்துப் பாடங்களையும் படிப்பதற்கு ஒரு ஏற்பாடு செய்வார்களா எனக் கேட்டுக் கொள்ள ஆசைப்படு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நண்பரவர்கள் உறுதுணையாக இருந்தால் அந்த முயற்சி மேற்கொள்ளப் படும். (சிரிப்பு).

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மெரினா கடற்கரைக்கு சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகின்றார்கள். அங்கே ஒரு மீன் கண்காட்சி சிறியதாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கண்காட்சியை விரிவுபடுத்தினால் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக இருக்கும். அதனால் வருமானத்தையும் பெருக்கலாம். எனவே அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி வசதி இருந்தால் சென்னை கடற்கரையில் இவ்வாறு கண்காட்சி அமைக்கப்படும் என்று சொன்னார்கள். சென்னை மாநகராட்சிக்கு அதனுடைய வளர்ச்சிக்காகவும், அழகுபடுத்துவதற்காகவும் இப்போது நிறைய பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். கோடிக் கணக்கான ரூபாய். அதிலே பல லட்சம் ரூபாயை எடுத்து இதற்கென ஒதுக்கி, இதைச் செய்வதற்கு, இந்தக் கண்காட்சியை அமைப்பதற்கு, அதுவும் இந்த ஆண்டிலேயே முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தப் பிரச்சினையில் உறுப்பினர்கள் அனைவருமே அதிக ஆர்வம் காட்டுகிற காரணத்தால் முதல் கட்டமாக மெரினாக் கடற்கரையில் இது போன்ற உயிரினக் காட்சி சாலை அமைப்பதை விரைவுபடுத்த இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெரினா கடற்கரையில் தற்போது ஒரு மீன் காட்சியகம் ''அக்வேரியம்'' இருக்கிறது. அதனுடைய பராமரிப்பு சரியாக இல்லாத காரணத்தாலே அது பயன் உள்ளதாக இல்லை. அதை முறையாகப் பராமரிக்கவும் ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பழையதும் பராமரிக்கப்படும்; புதியதும் வரும்.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மெரினா கடற்கரையில் தலைவர்களின் கல்லறைகளை இனிமேல் வைக்கக்கூடாது என்று ஒரு பொது நல வாதி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இருப்பதாகத் தெரிகிறது. அது பற்றி அரசுக்குத் தெரியுமா? ஆம் எனில், இந்த அக்வேரியத்தை வேறு இடத்திற்கு மாற்ற திட்டமா அல்லது கல்லறைகளை இனிமேல வைக்கக் கூடாது என்ற திட்டமா என்று அறிய விரும்புகிறேன்.

1989 மார்ச் 28]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, இது உயிரோடு இருப்பவர்களுடைய காட்சி சாலை பற்றிய கேள்வி. உயிர் இழந்தவர்களுடைய காட்சி சாலை பற்றிய கேள்வி அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. உரிமைப் பிரச்சினை

முதல் அமைச்சர் மற்றும் சென்னை நகரக் காவல்துறை ஆணையர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீதும், சென்னை நகரக் காவல் துறை ஆணையர் மீதும் அறிவிப்புகள் கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. எஸ்.ஆர். இராதா, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், திரு. எஸ். டி. உகம்சந்த், திரு. ஆர். அண்ணாநம்பி, திரு. கே. ஏ. செங்கோட்டையன், திரு. குமரி அனந்தன்.

இது எவ்வாறு அவை உரிமை மீறிய பிரச்சினையாகும் என்பதைக் குறித்து மிகச் சுருக்கமாகத் தெரிவிக்குமாறு வேண்டு கிறேன். முதலில் திரு. குமரி அனந்தன்.

திரு குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்திருந்த உரிமை மீறல் பிரச்சினை குறித்த தீர்மா னத்திற்குக் காரணங்கள் கூறி, எந்த வகையிலே இது உரிமை மீறல் என்று சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதலிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு சட்டமன்றத்தினு டைய பெருமையைப் பற்றி நான் இங்கே சொல்ல வேண்டியது இல்லை. அவைகள் பல இருப்பினும், அவைகளிலே தலை சிறந்த அவை எனப் புகழ்பெற்ற இந்த அவையிலே உறுப்பினர் களாக இருக்கின்றவர்கள், தங்களுடைய கடமையினைச் சரிவர ஆற்றுவதற்கு துணை செய்கிற சூழ்நிலை எந்த நேரமும் இருக்க வேண்டும் என்பதனை மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களும், ஆளுகின்ற பொறுப்பில் இருக்கிற முதல்வர் அவர் களும், எதிர்க்கட்சியில் இருக்கிற உறுப்பினர்களும், ஆளும் கட்சியில் இருக்கிற உறுப்பினர்களும் அத்தனை பேர்களும் ஒத்துக் கொள்வார்கள்.